1987 ஏப்ரல் 10]

கோத்தகிரி அணைக்கட்டில் மின்சார சப்-டிவிஷன்.

318—(*வினா எண் 11871) திரு. எம். சிவக்குமார் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோத்தகிரியில் அணைக்கட்டு பகுதியில் மின்சார சப்-டிவிஷன் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோத்தகிரியில் ஒரு துணை மின்சார கோட்ட அலுவலகம் ஏற்கனவே இயங்கி வருவதால் இக் கேள்விக்கு இடமில்லை.

வட ஆற்காடு மாவட்டம் போளூர் கால்நடை மருந்தகம்.

319—(*வினா எண் 12513) திரு. ஜெ. ராஜாபாபு : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், போளூரில் உள்ள கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?;

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முத்துப்பேட்டையில், லக்கூனை சுற்றுலா மையமாக்கல்.

377—(*வினா எண் 10207) திரு. ச. ஞானசுந்தரம், திரு. எம். தங்கமணி மற்றும் திரு. எஸ். இரத்தினவேலு: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முத்துப்பேட்டை அருகில் கடலில் லக்கூன் என்ற இடத்தைச் சுற்றுலா மையம் ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?;

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

[1987 ஏப்ரல் 10

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்.

(அ) வறட்சி நிவாரணக் குழுவை உறுப்பினர்கள் சந்திக்க ஏற்பாடு.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் சார்பிலே தமிழகத்திற்கு வர இருக்கிற வறட்சி நிவாரணக் குழு 2 நாட்கள் தமிழகத்தைச் சுற்றிப் பார்க்க இருப்பதாக மாண்புமிக்க நிதி அமைச்சர் அவர்கள் முன்பு ஒருநாள் இந்த அவையிலே அறிவித்தார்கள். தமிழகத்திலே கிட்டத்தட்ட எல்லா மாவட்டங்களிலும் வறட்சி நிலை நிலவுகின்ற காரணத்தினாலே அந்த வறட்சி நிவாரணக் குழுவைப் பல்வேறு குழுக்களாகப் பிரித்து எல்லா மாவட்டங்களையும் பார்ப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? மாவட்டத் தலைநகரங்களில் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கின்ற சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த வறட்சி நிவாரணக் குழுவைச் சந்திக்க விரும்புகின்ற காரணத்தினாலே போதுமான முன்னறிவிப்பு கொடுத்து, அவகாசம் கொடுத்து, அந்தக் குழுவைச் சந்திப்பதற்கான ஏற்பாட்டை மாவட்டத் தலைமை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.